DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.14/2023**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. பாண்டி | Caste: | |
| Father's Name: | இராமசாமி | Calling: | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 56 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரி ஆஜர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது முதுகுளத்தூர் உட்கோட்டத்திற்குட்பட்ட பேரையூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.12.2022ம் தேதி இளம்செம்பூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பொறுப்பில் பணியில் இருந்தபோது 16.12.2022ம் தேதி இரவு சுமார் 19.45மணிக்கு கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் கர்ணன் என்பவர் நிலையத்தில் நிலைய பொறுபபில் இருந்த தலைமை காவலர் 1597 திரு. சேதுபதி என்பவரிடம் கொடுத்த புகார் மனுவை அவர் பெற்று மனு எண். 182/2022 என பதிவு செய்து கொடுத்திருந்ததை நான் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண். 62/2022 சட்டப்பிரிவுகள் 323 IPCand sec 3(1)(r),3 (1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி

வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** . இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் அவர் கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டேன். புகார் மனுவில் சம்பவமானது சிவநாதன் என்பவரது ஹோட்டலுக்கு முன்பு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரி மணியின் தகப்பனார் பெயர் இருளாண்டி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் புகார் கொடுத்த நபரின் கையெழுத்து ஒரு மையிலும் புகார் வாசகங்கள் மற்றொரு மையிலும் உள்ளது என்றால் சரிதான். எதிரி இவ்வழக்கின் புகார்தாரரான கர்ணன் மற்றும் அவரை சார்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் ஒரு மனு ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுவிற்கு வழங்கப்பட்ட ரசீது எண். 181/2022 என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த மனுவிற்கு ரசீது எண். 182/2022 என கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் புகார்தாரர் கர்ணன் மற்றும் அவரை சார்ந்தவர்கள் மீது கு.எண். 61/2022 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை எதிரி தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை எ.ம.சா.1. அந்த முதல் தகவல் அறிக்கையும் நான்தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் இந்த வழக்கின் புகார்தாரர் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரியின் மகள் தண்ணீர் குடம்

கொண்டுபோகும்போது புகார்தாரர் வழிமறித்தாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பணி சம்பந்தமாக தினசரி நாட்குறிப்பு உண்டு என்று சொன்னால் சரிதான். 17.12.2022ம் தேதி நான் பணி செய்தது சம்பந்தமான குறிப்புகள் அந்த நாட்குறிப்பேட்டில் இருக்கும் என்றால் சரிதான். அதை வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் நான் குறிப்பிட்ட தேதியில், நேரத்தில், குறிப்பிட்ட பணியை செய்யவில்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாருக்கு பதிலிடை வழக்காக புகார்தாரர் ஒரு பொய்யான புகாரை கொடுத்தார் என்றும் அந்த புகாரை நான் முறையாக விசாரணை செய்யாமல் இந்த எதிரி மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் புகார்தாரர் பள்ளர் என்று கெட்ட வார்த்தையால் சொன்னார் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். சாதியை அவமதிக்கும் வகையிலோ இழிபடுத்தும் வகையிலோ எதிரி பேசவில்லை என்றும் பொய்யாக கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 14:57:44 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)